# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **63/2015**

ஆணை எண். **68/2016**

நாள் : **07/04/2016**

**திரு. வி. கணேசன்,**
**எண். 168, சாந்தி நகர்,**
**கொரட்டூர்,**
**சென்னை – 600 080.** -- **முறையீட்டு மனுதாரர்**

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 7,**
**அம்பத்தூர், சென்னை – 600 053.** -- **எதிர் மனுதாரர்**

**சென்னை மாநகராட்சி, கொரட்டூர் கிராமம், சாந்தி நகர், 168 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. வி. கணேசன் என்பவரது முறையீட்டு மனு 15.05.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு , 63/2015 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

## ஆணை

சென்னை மாநகராட்சி, கொரட்டூர், சாந்தி நகர், எண்.168 எண்ணுள்ள முகவரியில் வசிக்கும் திரு வி. கணேசன் என்பவர் தனக்குச் சொந்தமான புல எண்.143/2A1 நிலத்தின் திறந்த வெளியில் முறையின்றி மின்சார இணைப்பு பெற்றும், உரிமம் இல்லாமலும் திரு. சந்திரா ஓபுலா ரெட்டி என்பவர் ஸ்ரீ விநாயகா மார்பிள் என்ற நிறுவனத்தை நடத்தி வருவதாக இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்திருந்தார். மனுதாரரின் முறையீட்டு மனு மீது மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. மேலும் 10.06.2015 அன்று 7 வது மண்டல உதவி வருவாய் அலுவலரிடம் விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் பொழுது மேற்படி

மார்பிள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டதாகவும், உரிமம் வழங்க மறுக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதை மனுதாரரிடமும் உறுதிசெய்யப்பட்டது.

இந்நிலையில் மனுதாரர், மேற்படி மார்பிள் நிறுவனத்தினர் ஆக்கிரமிப்பு செய்து மார்பிள் கற்களையும் மற்ற பொருட்களையும் அப்படியே விட்டு விட்டு சென்றுள்ளதாகவும் அவற்றை அகற்ற உத்தரவிடுமாறு கோரியிருந்தார். இவ்வாக்கிரமிப்பினை அகற்ற உரிய துறையினை நாடுமாறும் மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது. எனினும் மனுதாரர் மீண்டும் இம்முறைமன்றத்தை நாடி தனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ள மார்பிள் நிறுவனத்தினை அகற்ற உதவிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. தனியார் இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட இம்முறைமன்ற நடுவம் ஈடுபடுவது தன்பணியன்று எனக் கருதப்படுகிறது. எனவே மனுதாரரின் முறையீட்டினை அனுமதிக்க இயலாது எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்.

பெறுநர்

**திரு. வி. கணேசன்,**
**எண். 168, சாந்தி நகர்,**
**கொரட்டூர்,**
**சென்னை – 600 080.**

நகல்

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 7, சென்னை மாநகராட்சி,**
**அம்பத்தூர், சென்னை – 600 053..**